[பேரவைத் தலைவர்]

மருத்துவமனையில் போதுமான படுக்கை வசதிகள் மற்றும் இதர வசதிகள் இல்லாமையால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' கவன ஈர்ப்பு தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை)

(57) புதுக்கோட்டை பூம்புகார் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புதுக்கோட்டை நகரில் இயங்கி வந்த கைவினைக் கலைஞர்களை கொண்டு ஒப்பனை பொருள்கள் தயாரிக்கும் பூம்புகார் நிறுவனம் 31–3–1986 முதல் மூடப்பட்டுள்ளதன் பொருட்டு வேலை இழந்த பெண்கள் 1–4–1986 முதல் உண்ணா விரதம் இருந்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அந்த தொழிலகம் இப்போது மூடப்பட்டிருக்கிறது. அதில் ஏறக்குறைய 14 பெண்கள் பீஸ் ரேட்டில் வேலை செய்கிறார்கள். ஏறத்தாழ 70,000 ரூபாய்க்கு மேல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தேங்கியிருக்கின்றன. தேங்கியிருக்கின்ற பொருள்கள் உடனடியாக விற்பதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. ஒரு பக்கத்தில் பார்த்தால் 14 பெண்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. அதே நேரத்தில் உற்பத்தி செய்த சிறுசிறு பாய்கள், தடுக்குகள் போன்றவை விற்பனைக்கு லாயக்கில்லாமல் இருக்கிறது. என்றாலும் கூட தக்க நடவடிக்கை மூலம் பாதிக்காதபடி, தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் விற்பனை நிலையம் எப்போது மறுபடியும் துவங்கும்? இப்போது விற்பனை நிலையத்தை பொறுத்தவரை மாநில அளவிலே இருக்கின்ற பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு தேவைக்கு அதிகமான அதிகாரிகள் இருப்பதால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தினை சொல்வதன் காரணமாக, இதைப்போல மாவட்டத்தில் உள்ள எல்லா மையங்களிலும் இதே நிலைமை ஏற்படுவதால் இந்த பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகள்

[ஜே. முகம்மது கனி]

இல்லாமல் புதுக்கோட்டை பூம்புகார் விற்பனை நிலையத்தை தொடர்ந்து நடத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையத்தை பொறுத்த வரையில் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிகாரி பற்றிய குறிப்பு இல்லை. பீஸ் ரேட் மூலமாக கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு சம்பளம் என்று சொன்னால் நஷ்டமாக இருந்தாலும்கூட மாதம் இவ்வளவு சம்பளம் என்று கொடுத்து விடலாம்.

(முற்பகல் 11—20)

ஒரு வேலையைச் செய்து முடித்தால் அந்த வேலையைச் செய்து முடித்த பிறகு 10 காசு, 15 காசு என்ற வகையில் வேலை செய்வதற்கான மூலப் பொருளுக்குச் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன. அந்தச் சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(58) தஞ்சை ராஜா அரசினர் மருத்துவமனையில் ஆபரேஷன் செய்ததில் ஏற்பட்ட கோளாறு.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை ராஜா அரசினர் மருத்துவமனையில் காலில் ஆப்பரேஷன் செய்வதற்குப் பதிலாக வேறு இடத்தில் ஆப்பரேஷன் செய்து அதனால் ஏற்பட்ட நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

(59) புதுக்கோட்டை காவேரி நூற்பாலைத் தொழிலாளர்கள் போராட்டம்.

திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை காவேரி நூற்பாலை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று அங்கே உள்ள தொழிலாளர்கள் 9—5—1986 முதல் பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சுமார் 180 பேர் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள் என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)